**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 131 /2019**

PW1 – விமலா க/பெ பாலகிருஷ்ணன்
நாள் –31.01.2024.

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி செய்யப்படுகிறார்.

**முதல் விசாரணை தொடர்ச்சி :**

22.03.2022 தேதியிட்ட திருவெண்காடு காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனு ஏற்பு ரசீதின் அசலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.14 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** (மேற்படி ஆவணத்தில் திருத்தம் இருப்பதாகவும், புகார் மனுவின் நகலை தாக்கல் செய்யவில்லை எனவும் பிரதிவாதி தரப்பில் ஆட்சேபணை செய்யப்பட்டு ஆட்சேபணையின் பேரில் குறியீடு செய்யப்படுகிறது) எனது பெயரில் உள்ள மின் கட்டண அட்டையின் அசலோடு ஒப்பீடு செய்யப்பட்ட நகலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.15 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

மேற்படி ஆவணங்களை ஏற்றுக்கொண்டு தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.